بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹு'ல்லாஹு'த் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/06/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 20 யமாமா போரில் சஹாபா பெருமக்கள் (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) உடைய மகத்துவமிக்க தியாகங்கள் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு சென்று கொண்டிருந்தது. இது தொடர்பாக, ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் முஸைலமா கஸ்ஸாபோடு போர் புரிந்தது பற்றிக் கூறப்பட்டது. இந்தப் போரில் அன்ஸாரிகளின் கொடி ஹஸ்ரத் சாபித் பின் கைஸ் (ரலி) அவர்களிடம் இருந்தது. முஹாஜிர்களின் கொடி ஹஸ்ரத் ஸைத் பின் கத்தாப் (ரலி) அவர்களிடம் இருந்தது. **ஹஸ்ரத் ஸைத் பின் கத்தாப் (ரலி) அவர்கள் மக்களிடம் கூறினார்கள்:** மக்களே! உறுதியாக நிலைத்து நில்லுங்கள். எதிரிகள் மீது பாய்ந்து விடுங்கள். முன்னோக்கி அடியெடுத்து வையுங்கள். பிறகு, கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஒன்று அல்லாஹ் அவர்களுக்குத் தோல்வியைத் தந்து விடுவான். அல்லது நான் அல்லாஹ்வை சென்றடைவேன். அதுவரை நான் பேச மாட்டேன். பிறகு, அன்னாரும் ஷஹீத் ஆகி விட்டார்கள். **ஹஸ்ரத் ஸைத் பின் கத்தாப் (ரலி) அவர்கள் தொடர்பாக வருகிறது:** அவர்கள் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் ஒன்று விட்ட சகோதரர் ஆவார்கள். ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் ஒருவர் ஆவார்கள். பத்ர் மற்றும் அதற்குப் பிறகு நடந்த போர்களில் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்துக்குப் பிறகு, இவர்களுக்கும் மஃன் பின் அத்தீ அன்ஸாரி (ரலி) அவர்களுக்கும் இடையில் சகோதரத்துவ உடன்படிக்கை செய்து வைத்தார்கள். இவர்கள் இருவருமே யமாமா போரில் ஷஹீத் ஆகி விட்டார்கள். யமாமா போரில் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் படையை வரிசை படுத்திய போது, ஹஸ்ரத் ஸைத் பின் கத்தாப் (ரலி) அவர்களை ஒரு பகுதிக்குப் தளபதியாக நியமித்தார்கள். அவ்வாறே, அந்தப் போரில் முஹாஜிர்களின் கொடியும் இவர்களின் கையில் இருந்தது. இவர்கள் கொடியை ஏந்திக் கொண்டு முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். மிகவும் துணிச்சலோடு போரிட்டார்கள். எதுவரை என்றால், ஷஹீத் ஆகி விட்டார்கள். அப்போது, கொடி விழுந்து விட்டது. சாலிம் மௌலா அபீ ஹுதைஃபா (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கொடியை ஏந்திக் கொண்டார்கள். இந்தப் போரில் ஸைத் (ரலி) அவர்கள் முஸைலமாவின் வலக்கையாக இருந்த, தீரமிக்க ஒரு குதிரை வீரன், ரஜ்ஜால் பின் உன்ஃபா என்பவனைக் கொன்றார்கள். அவர்களைக் கொன்றவர் மர்யம் ஹனஃபீ எனப்பட்டார். இதற்கு பிறகு, அவர் முஸ்லிம் ஆகிவிட்டார். ஒரு முறை

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம், 'நீர் தானே எனது சகோதரரைக் கொன்றீர்?' என்று கேட்டார்கள். அவர் கூறினார்: அமீருல் முஃமினீன் அவர்களே! அல்லாஹ் எனது கைகளால் ஸைத் (ரலி) அவர்களுக்கு கண்ணியத்தை வழங்கினான். மேலும், அவர்களின் கைகளால் என்னை இழிவு படுத்தவில்லை. அதாவது, அவர்கள் ஷஹாதத் மரணத்தைப் பெற்றார்கள். எனக்கு இஸ்லாத்தை ஏற்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்து விட்டது.

**ஸைத் (ரலி) அவர்கள் கொல்லப்பட்ட செய்தி ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் தெரிய வந்த போது, அன்னார் கூறினார்கள்:** ஸைத் இரண்டு நன்மைகளில் என்னை முந்திச் சென்று விட்டார். *இது முன்னரும் ஒருமுறை கூறப்பட்டு விட்டது.* அதாவது, எனக்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். எனக்கு முன் ஷஹீத் ஆகி விட்டார். மாலிக் பின் நுவைராவை ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் கொன்று விட்டார்கள். அப்போது அவனுடைய சகோதரர் முத்மிம் பின் நுவைரா தன்னுடைய சகோதரன் மாலிக் பற்றி கவிதை கூறினார். அவருக்குத் தன்னுடைய சகோதரன் மீது அதிக அன்பு இருந்தது. ஒரு முறை அவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைச் சந்தித்த போது, அவர் தனது சகோதரனைப் பற்றி எழுதிய இரங்கல் கவிதையை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு வாசித்துக் காட்டினார்.

அப்போது **ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவரிடம் கூறினார்கள்:** எனக்குக் கவிதை கூறத் தெரிந்திருந்தால், நானும் உன்னைப் போன்று என்னுடைய சகோதரர் ஸைதுக்காகக் கவிதை கூறி இருப்பேன். இதைக் கேட்ட முத்மிம், 'தங்களுடைய சகோதரர் மரணித்தது போன்று என்னுடைய சகோதரர் மரணித்திருந்தால், அதாவது, ஷஹீது ஆகியிருந்தால், நான் ஒருபோதும் என்னுடைய சகோதரரைப் பற்றிக் கவலை பட்டிருக்க மாட்டேன்' என்று பணிவுடன் கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: எவ்வளவு அழகாக என்னுடைய சகோதரருடைய மரணத்திற்கு நீ இரங்கல் தெரிவித்தாயோ அவ்வளவு அழகாக வேறு யாரும் தெரிவிக்கவில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: அதிகாலைத் தென்றல் வீசும் போது, ஸைதின் ஞாபகம் வந்து விடுகிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* எவ்வாறு இருப்பினும், போரைப் பற்றி கூறப்படுகிறது. முஸைலமா கஸ்ஸாப் அதுவரையிலுமே உறுதியாக நின்றான். மேலும், காஃபிர்களின் போரின் மையாக ஆகியிருந்தான். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள், 'முஸைலமாவைக் கொல்லாதவரை போர் முடிவுக்கு வராது' என்று நுணுக்கமாக ஆராய்ந்து கூறினார்கள். எனவே, ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் தனியாக அவர்களுக்கு முன்னால் வந்தார்கள். ஒவ்வொருவரையும் ஒற்றையாக சண்டையிட அழைத்தார்கள். ஆக, எவன் சண்டையிட முன்வந்தாலும் ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் சண்டையிடுவதற்காக முஸைலமாவைக் கூவி அழைத்தார்கள். அவன் ஓடிவிட்டான். அவனது கூட்டாளிகளும் ஓடிவிட்டனர். அப்போது, **ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் உரத்த குரலில் மக்களை அழைத்துக் கூறினார்கள்:**

எச்சரிக்கை! இப்போது அலட்சியமாக இருக்கக்கூடாது. முன்னோக்கி செல்லுங்கள். ஒருவரையும் தப்பி ஓட விட்டு விடாதீர்கள். இதைக் கேட்ட முஸ்லிம்கள் அவர்களை விரட்டிச் சென்றார்கள். சஹாபா பெருமக்கள் அந்தப் போரில் எந்த அளவு மிகவும் உன்னதமான பொறுமை மற்றும் உறுதிப்பாட்டினைக் காட்டினார்கள் என்றால், அதற்கு உதாரணம் கிடைப்பதில்லை. தொடர்ச்சியாக எதிரிகள் பக்கம் முன்னேறிக் கொண்டே இருந்தார்கள். எதுவரை என்றால், அல்லாஹ் எதிரிகளுக்கு எதிரில் வெற்றியை வழங்கினான். காஃபிர்கள் புறுமுதுகிட்டு ஓட ஆரம்பித்தனர். முஸ்லிம்கள் அவர்களை விரட்டிச் சென்றார்கள். கொன்று கொண்டே சென்றார்கள். அவர்களின் தலைகள் மீது வாள்களை வீசிக் கொண்டே சென்றார்கள். எதுவரை என்றால், அவர்களை ஒரு தோட்டத்தில் தஞ்சம் புக வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாக்கி விட்டார்கள்.

இது மிகவும் விசாலமான தோட்டமாக இருந்தது. அதைச் சுற்றி சுவர்கள் இருந்தன. இந்தத் தோட்டம் போர்க்களத்துக் அருகிலேயே இருந்தது. முஸைலமாவுக்கு சொந்தமானதாக இருந்தது. முஸைலமா கஸ்ஸாபும் தனது கூட்டாளிகளுடன் அந்தத் தோட்டத்திற்குள் சென்று விட்டான். அவர்கள் தோட்டத்தின் கதவை அடைத்து விட்டார்கள். சஹாபா பெருமக்கள் நாலாப்புறத்திலிருந்தும் அந்தத் தோட்டத்தை முற்றுகையிட்டு விட்டனர். எப்படியாவது அந்தத் தோட்டத்திற்குள் செல்ல முடிய வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் ஏதாவது இடத்தைத் தேட ஆரம்பித்தார்கள். ஆனால், இது கோட்டையைப் போன்ற தோட்டமாக இருந்தது. தேடிப்பார்த்தும், அதற்குள் செல்வதற்கான எந்த இடமும் அகப்படவில்லை. கடைசியில், ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களின் சகோதரர் **ஹஸ்ரத் பராஃ பின் மாலிக் (ரலி) அவர்கள் கூறினார்கள்:**

முஸ்லிம்களே! இப்போது ஒரேயொரு வழிதான் இருக்கிறது. நீங்கள் என்னைத் தூக்கி தோட்டத்திற்குள் எறிந்து விடுங்கள். நான் உள்ளே சென்று கதவைத் திறந்து விடுவேன். ஆனால், மிகவும் உயர்தரமிக்க தங்களது ஒரு தோழர் ஆயிரக்கணக்கான எதிரிகளுக்கு மத்தியில் தமது உயிரை இழப்பதை முஸ்லிம்களால் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்தது. அவர்கள் இவ்வாறு செய்ய மறுத்து விட்டார்கள். ஆனால், ஹஸ்ரத் பராஃ பின் மாலிக் (ரலி) அவர்கள் வற்புறுத்த ஆரம்பித்து விட்டார்கள். மேலும், கூறினார்கள்: நான் உங்களுக்கு அல்லாஹ்வின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். என்னைத் தோட்டத்திற்குள் வீசி விடுங்கள். கடைசியில் நிர்பந்தத்திற்காளாகி முஸ்லிம்கள் அவர்களைத் தோட்டத்தின் சுவற்றின் மீது ஏற்றி விட்டார்கள். சுவற்றின் மீது ஏறி ஹஸ்ரத் பராஃ பின் மாலிக் (ரலி) அவர்கள் எதிரிகளின் பெரும் எண்ணிக்கையைப் பார்த்த போது, ஒரு விநாடி நின்றார்கள். ஆனால், பிறகு அல்லாஹ்வின் பெயரை எடுத்து தோட்டத்தின் கதவுக்கு அருகே குதித்து விட்டார்கள். மேலும், எதிரிகளோடு சண்டையிட்டவாறு, அவர்களைக் கொன்றவாறு, கதவை நோக்கி விரைய ஆரம்பித்தார்கள். கடைசியில் அவர்கள் கதவை அடைவதில் வெற்றி கண்டு, தோட்டத்தின் கதவைத் திறந்து விட்டார்கள். வெளியில் முஸ்லிம்கள் கதவு திறப்பதற்கே காத்துக் கொண்டிருந்தார்கள். கதவு திறந்த உடனேயே அவர்கள் தோட்டத்திற்குள் நுழைந்து, எதிரிகளைக் கொல்ல ஆரம்பித்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் முஸ்லிம்களின் கைகளால் கொல்லப்பட்டனர்.

முஸ்லிம்கள் முர்தத்களுடன் போர் புரிந்தவாறு, முஸைலமா கஸ்ஸாப் வரை சென்றடைந்து விட்டார்கள். உஹது போரில் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை ஷஹீது ஆக்கிய வஹ்ஷீ பின் ஹர்ப் முஸைலமாவை நோக்கி முன்னேறினார். அவர் ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்களை ஷஹீது ஆக்கிய தனது அதே ஈட்டியை முஸைலமாவை நோக்கி எறிந்தார். அது அவன் மீது பட்டு, மறுபக்கமாக சென்று விட்டது. பிறகு, அபூ தஜானா அவர்கள் அவன் பக்கம் விரைந்தார்கள். அவன் மீது வாள் வீசினார்கள். அவன் நிலத்தில் செத்து மடிந்தான்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* யமாமா போரின் விளக்கம் பிறிதோரிடத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் முஸ்லிம்கள் தரப்பிலிருந்து வெளிப்படுத்தபட்ட துணிச்சல் மற்றும் வீரத்தைப் பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளது: இரு பிரிவுகளுக்கும் இடையே கடுமையான போர் நடைபெற்றது. எதுவரை என்றால், இரு பிரிவுகளின் பல மக்கள் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். முஸ்லிம்களில் எல்லாருக்கும் முதலாக, மாலிக் பின் அவ்ஸ் அவர்கள் ஷஹீத் ஆனார்கள். பல ஹாஃபிஸ்களும் (திருக்குர்ஆனை முழுமையாக மனனம் செய்தவர்களும்) ஷஹீத் ஆகி விட்டார்கள். இரு படைகளிலும் மும்முரமான போர் நடைபெற்றது. எதுவரை என்றால், முஸ்லிம்கள் முஸைலமாவின் படையிலும் முஸைலமாவின் படை முஸ்லிம்களின் படையையும் சென்றடைந்தது. சாலிம் மௌலா அபீ ஹுஸைஃபா (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் தமது பாதி கால்கள் வரை குழி தோண்டினார்கள்.

அவர்களிடம் முஹாஜிர்களின் கொடி இருந்தது. சாபித் (ரலி) அவர்களும் அதே போன்ற குழியைத் தமக்காகத் தோண்டினார்கள். அவர்களிடம் அன்ஸாரிகளின் கொடி இருந்தது. பிறகு, அவர்கள் இருவரும் தமது கொடிகளைத் தம்முடன் இணைத்துக் கொண்டார்கள். எதுவரை என்றால், சாலிம் ஷஹீத் ஆகி விட்டார்கள். அபூ ஹுதைஃபா அவர்களும் ஷஹீத் ஆகி விட்டார்கள். ஹஸ்ரத் அபூ ஹுதைஃபா (ரலி) அவர்களின் தலை சாலிம் (ரலி) அவர்களின் காலடியிலும் சாலிம் (ரலி) அவர்களின் தலை ஹஸ்ரத் அபூ ஹுதைஃபா (ரலி) அவர்களின் காலடியிலும் இருந்தது. சாலிம் (ரலி) அவர்கள் ஷஹீதான பிறகு, சிறிது நேரத்திற்குக் கொடி அப்படியே கிடந்தது. பிறகு, பத்ர் சஹாபியான யஸீத் பின் கைஸ் (ரலி) அவர்கள் முன்னால் வந்து அந்தக் கொடியைத் தூக்கிக் கொண்டார்கள். எதுவரை என்றால், அவர்களும் ஷஹீத் ஆகி விட்டார்கள். பிறகு, ஹகம் பின் ஸயீத் பின் ஆஸ் அவர்கள் அந்தக் கொடியைத் தூக்கிக் கொண்டார்கள். மேலும், அதைப் பாதுகாத்தவாறு நாள் முழுவதும் சண்டையிட்டு வந்தார்கள். பிறகு, அவர்களும் ஷஹீத் ஆகி விட்டார்கள். **வஹ்ஷீ கூறுகிறார்:** கடுமையான போர் நடைபெற்றது. மூன்று முறை முஸ்லிம்களின் பாதங்கள் ஆட்டங் கண்டன. நான்காவது முறை முஸ்லிம்கள் திரும்பித் தாக்குதல் தொடுத்தார்கள். அவர்களின் பாதங்கள் உறுதியாக நிலை பெற்று விட்டன. அவர்கள் வாள்களுக்கு முன்னால் திடமாக நின்று விட்டார்கள்.

அல்லாஹ் எங்களுக்குத் தனது உதவியை இறக்கினான். பனூ ஹனீஃபாவுக்கு அல்லாஹ் தோல்வியை வழங்கினான். அல்லாஹ் முஸைலமாவைக் கொன்று விட்டான். வஹ்ஷீ கூறுகிறார்: நான் அன்று எனது வாளை நன்றாக வீசினேன். எதுவரை என்றால், அந்த வாள் என் கையில் கைப்பிடி வரை ரத்தத்தால் நிரம்பி விட்டது. **ஹஸ்ரத் இப்னு உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் கூறுகிறார்கள்:** நான் ஹஸ்ரத் அம்மார் (ரலி) அவர்கள் ஒரு பாறையின் மீது ஏறியிருக்கக் கண்டேன். அவர்கள் உரத்த குரலில் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள்: முஸ்லிம் கூட்டமே! நீங்கள் சொர்க்கத்தை விட்டு ஓடுகிறீர்களா? நான் அம்மார் பின் யாஸிர் ஆவேன். என் பக்கம் வாருங்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்கள்: அவர்கள் காது வெட்டுப்பட்டு தொங்கிக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன். **அபூ கைஸமா நஜ்ஜாரீ கூறுகிறார்கள்:** யமாமா போர் அன்று, முஸ்லிம்கள் சிதறிப் போன போது, நான் ஒரு புறம் விலகி விட்டேன். என் கண் முன் இந்தக் காட்சி இருந்தது. அதாவது, அன்று நான் ஹஸ்ரத் அபூ தஜானா (ரலி) அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அபூ தஜானா (ரலி) அவர்கள் மீது பனூ ஹனீஃபா கூட்டத்தினர் தாக்குதல் தொடுத்தனர். அப்போது இவர்கள் தமக்கு முன்னாலும் வலப்புறமும் இடப்புறமும் வாள் வீசுவார்கள். (இந்தக் குறிப்பு இனி தொடரும் என்று கூறிய பிறகு) *ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:*

இப்போது நான் பாக்கிஸ்தானுக்காக துஆவுக்காகக் கூற விரும்புகிறேன். பொதுவாக நிலைமைகள் சீர்கெடத்தான் செய்கின்றன. பிறகு, இத்தகைய சூழ்நிலையில் அஹ்மதிகளின் பக்கம் அவர்களின் கவனம் ஏற்பட்டு விடுகிறது. எதிர்ப்பு அதிகரிக்கிறது. பழைய கபர்களைத் தோண்டி எடுப்பதைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. மிகவும் தீய இயல்புடைய மக்களாக இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களை பிடிப்பானாக! இதே போன்று அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்களும் இன்றைய நாள்களில் பிரச்சனைகளில் சிக்கியுள்ளார்கள். ஆஃப்கானிஸ்தானின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் எல்லார் மீதும் தனது கருணையை இறக்குவானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இப்போது நான் சில மர்ஹூம்களைப் பற்றி கூற விரும்புகிறேன். **முதல் குறிப்பு இயக்கத்தின் முரப்பி மதிப்பிற்குரிய நஸீம் மஹ்தீ சாஹிப் அவர்களுடையது.** கடந்த நாள்களில் இவர்கள் 69 வயதில் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். இவர்கள் 1976 இல் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் இருந்து தேர்ச்சி பெற்றார்கள். 83 இல்

இவர்களை முரப்பியாக சுவிட்சர்லாந்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. **84** இல் இவர்களை நாயிப் வக்கீலுத் தப்ஷீர் ஆக நியமிக்கப்பட்டது. **1984** டிசம்பரில், இவர்கள் இலண்டனுக்கு வந்தார்கள். பிறகு இங்கு லண்டனின் **Private Secretary** ஆகவும் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. **85** லிருந்து **2008** வரை முபல்லிஃக் ஆகவும், அதற்கு பிறகு, கனடாவின் முபல்லிஃக் இன்சார்ஜ் ஆகவும் பணியாற்ற நல்வாய்ப்பு பெற்றார்கள். இந்த காலகட்டத்தில் கனடாவின் அமீராகவும் இருந்தார்கள். **2009** இல் இருந்து **2016** வரை கனடாவின் முபல்லிஃக் இன்சார்ஜ் ஆக தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. **1986** இல் பைத்துல் இஸ்லாம் மிஷன் ஹவுஸ்காக **24** ஏக்கர் நிலம் வாங்கப்பட்டது. பிறகு அங்கு மக்கள் வசிப்பிடமும் ஆக்கப்பட்டது. இவர்களின் காலத்தில் பல அஹ்மதிகள் கனடாவில் வந்து வசித்தனர். இவர்கள் அந்த மக்களுக்கு அதிகமாக உதவி புரிந்தார்கள். பல மக்கள் இவர்களுக்கு நன்றி கடன்பட்டவர்கள் ஆவார்கள். டொரண்டோ மற்றும் கேல்கிரியில் இரண்டு பெரிய பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. பிற ஜமாஅத்களில் மையங்களும் நிறுவப்பட்டன.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* இவர்களின் காலத்தில் தான் வேன்க்வர் பள்ளியும் கட்டப்பட்டது என்று நினைக்கிறேன். எவ்வாறு இருப்பினும், இந்த இரண்டு பெரிய பள்ளிவாசல்களோ கட்டப்பட்டுள்ளன. அல்லாஹ்வின் அருளினால், **2003** இல் இவர்களுடைய காலத்திலே தான், ஜாமிஆ அஹ்மதிய்யா கனடா தோற்றுவிக்கப்பட்டது. **Mta North America Station** ஐ நிறுவுவதிலும் இவர்கள் பெரும் பணியாற்றியிருக்கிறார்கள். அல்லாஹ் இவர்களின் இந்தப் பணிகள் அனைத்தையும் ஏற்றுக் கொள்வானாக! நஸீம் மஹ்தீ சாஹிப் அவர்களுக்கு **2009** இல் **Order of Ontario** என்ற பதக்கம் கிடைத்தது. அது அந்த மாநிலத்தின் மிகப்பெரிய கண்ணியமாகும். இந்த விருது எந்த ஒரு துறையிலும் வெற்றி பெறுவதனாலும் உயர்த் தொண்டாற்றுவதனாலும் வழங்கப்படுகிறது. ஹஸ்ரத் மூன்றாவது கலிஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஆண்டு மாநாட்டின் போது, ஒருமுறை தம்முடைய சொற்பொழிவில், சுவிட்சர்லாந்தின் மிஷனுடைய முயற்சியில் நஸீம் மஹ்தி சாஹிப் அவர்களைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறினார்கள்: அல்லாஹ் அவர்களுக்கு வெகுமதி வழங்குவானாக! என்னோடு கலந்தாலோசித்த பிறகு, **8000** ஃபோல்டர்களை சுவிட்சர்லாந்தில் மலைப்பகுதிகளில் வசிக்கும் ஒவ்வொரு வீட்டுக்கும் கொண்டு சேர்த்து விட்டார்கள்.

*இதற்கு பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ரப்வாவைச் சேர்ந்த* ***அன்பிற்குரிய முஹம்மத் அஹ்மத் ஷரீம் சாஹிப்*** *மற்றும் மதிப்பிற்குரிய ரஷீத் அஹ்மத் சாஹிப் மர்ஹூம் அவர்களின் துணைவியார்* ***மதிப்பிற்குரிய சலீமா கமர் சாஹிபா*** *அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்த பிறகு, ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு, அவர்களின் ஜனாஸா தொழுகை தொழ வைத்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)**